# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## வீடமைப்புத் திட்டங்கள் மீதான திட்ட வழிநடத்தல் குழு கூட்டம்

வடக்கு மற்றும் தென் மாகாணங்களில் முன்னெடுக்கப்படும் கிராம சக்தி வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் இலங்கையின் 25 மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டுவரும் மாதிரி கிராம வீடமைப்பு திட்டங்கள் தொடர்பான திட்ட வழிநடத்தல் குழுவின் கூட்டம் ஒன்று இந்திய பிரதி உயர் ஸ்தானிகர் திரு.வினோத் கே ஜேக்கப் மற்றும் கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, கட்டிட பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு.கீர்த்தி ரஞ்சித் அபேசிறிவர்த்தன ஆகியோரின் இணைத்தலைமையில் 2021 பெப்ரவரி முதலாம் திகதி கொழும்பில் நடைபெற்றிருந்தது. இந்த திட்டங்களின் கீழ் இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்கள் இணைந்து நாடளாவிய ரீதியில் 2400 வீடுகளை நிர்மாணித்து வருகின்றன. இந்த திட்டத்தினை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அமுல்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி அமைச்சு, கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, கட்டிட பொருட்கள் தொழில் மேம்பாட்டு அமைச்சு, நிதி அமைச்சு மற்றும் திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களம் ஆகியவை இந்த அபிவிருத்தி திட்டங்களில் தொடர்புடைய இலங்கை அரசின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் பட்டியலில் உள்ளடங்குகின்றன

2. தற்போது காணப்படும் கொவிட்19 கட்டுப்பாடுகள் காரணமாக ஏற்பட்டிருக்கும் சவால்களை எதிர்கொள்வதற்காக 2020 டிசம்பரில் குறித்த 4 திட்டங்களுக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தன. இந்நிலையில் நடைபெற்று முடிந்த திட்ட வழிநடத்தல் குழு கூட்டத்தில் கொவிட்19 நோய் காரணமாக ஏற்பட்டிருக்கும் தாக்கங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதுடன் அவற்றினை எதிர்கொள்வதற்கான வழிமுறைகள் குறித்தும் ஆராயப்பட்டடிருந்தது. நான்கு மாவட்டங்களில் இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வீடுகள் கையளிக்கப்படிருக்கும் நிலையில் அடுத்த கட்டமாக மாத்தளை, பதுளை, மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் மேலதிக தொகுதிகளை வழங்குவது குறித்தும் தீர்மானிக்கப்பட்டது.

03. இந்த சந்திப்பினை ஆரம்பித்து வைத்திருந்த பிரதி உயர் ஸ்தானிகர் இலங்கையுடனான இந்தியாவின் அபிவிருத்தி ஒத்துழைப்பு பங்குடைமை குறித்து நினைவூட்டி இருந்தார். 2020 முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான

காலப் பகுதிக்குரிய அபிவிருத்தித் திட்டங்களை உயர் பெறுபேற்றினை கொண்ட சமூக அபிவிருத்தி திட்டங்களாக முன்னெடுப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை, 2020 நவம்பரில் இரு அரசாங்கங்களினாலும் புதுப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

4. 2021 ஜனவரி 28ஆம் திகதி துருது போயா தினத்தன்று இந்தியாவிலிருந்து கொவிசீல்ட் தடுப்பூசி இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் நடைபெற்ற முதலாவது திட்ட வழிநடத்தல் கூட்டம் இதுவாகும். இலங்கையில் தடுப்பூசி வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் தற்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை மற்றும் கொவிட்19 தடுப்பூசியினை விநியோகம் செய்தமை ஆகியவை தொடர்பாக இந்த சந்திப்பில் திருப்திகரமான நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அயல்நாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கும் அதேநேரம் சகல மனிதர்களுக்கும் இந்த தடுப்பூசியினை பகிர்ந்தளிக்க வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் வழங்கிய அறிவுரைக்கு அமைவாக இந்த ஒத்துழைப்பு காணப்படுவதாக பிரதி உயர் ஸ்தானிகர் சுட்டிக்காட்டியிருந்தார். அத்துடன் 2021 பெப்ரவரி 4ஆம் திகதியன்று சுதந்திர தினம் கொண்டாடப்படவிருக்கும் நிலையில் இலங்கை மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இந்த சந்தர்ப்பத்தில் பிரதி உயர் ஸ்தானிகர் வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொண்டிருந்தார்.

5. நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் இந்த வீட்டுத் திட்டங்கள் அனைத்தும் மக்களை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டங்களாகும். அத்துடன் இலங்கையில் இந்திய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் உதவித் திட்டங்களின் கீழ் சமூக மேம்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு இந்தத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதுவரையில் இந்தியா 3.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உதவித் திட்டங்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது. இதில் கிட்டத்தட்ட 560 மில்லியன் அமெரிக்க டொலர் முற்றுமுழுதாக நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி, சுகாதாரம் மற்றும் மருத்துவ பராமரிப்பு, கைத்தொழில் அபிவிருத்தி, வாழ்வாதாரம் மற்றும் புகலிடம், போக்குவரத்து, தொழில் பயிற்சி மற்றும் கலைகள், விளையாட்டு மற்றும் கலாசாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் மீதான அக்கறையுடன் இந்தியாவின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

*************

கொழும்பு
01 பெப்ரவரி 2021